மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.11/2025</u>

2026ம் ஆண்டு ஜனவரி 29ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாதேஸ்வரன் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>29.01.2026 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. பிரதிவாதி கோலி சோடா நிறுவனத்தை நடத்தி வந்ததாக நாங்கள் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே பிரதிவாதி தனது நிறுவனத்தை தொடர்ந்து நடத்தாமல் நிறுத்திவிட்டார் என்றால் அது சம்பந்தமாக எங்களுக்கு தகவல் எதுவும் வரவில்லை. நாங்கள் பிரதிவாதிக்கு கொடுத்த கடன் ஆனது அன் செக்யூர்டு லோன் வகையைச் சார்ந்தது என்றால் சரிதான். நாங்கள் பிரதிவாதிக்கு எந்த தேதியில் எவ்வளவு கடன் எவ்வளவு தொகை கொடுத்துள்ளோம் என்றால் 1,00,000/- ரூபாய் கடனாக பெற்றுள்ளார்.

2. நாங்கள் பிரதிவாதி எங்கள் வங்கிக்கு எவ்வளவு கடன் தொகையை திரும்ப கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டு எதுவும்

சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை நாங்கள் தாக்கல் செய்வதற்கு முன்பே பிரதிவாதி எங்கள் வங்கிக்கு ரூபாய் 92 ஆயிரம் தொகையை செலுத்தியுள்ளார் என்று சொன்னால் சரிதான். அவர் எங்களுக்கு கொடுக்க வேண்டிய மீத கடன் தொகை மற்றும் அதற்கான வட்டி மற்றும் இந்த வழக்கிற்கான செலவு தொகை ஆகியவற்றை சேர்த்து ரூபாய் 1,00,000/-கும் மேல் கொடுக்க வேண்டியுள்ளது நாங்கள் ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளுக்கு உட்பட்டு தான் வட்டி தொகையை கணக்கீடு செய்துள்ளோமா என்றால் ஆமாம்.

3. இந்த வழக்கு கடன் தொகை நிலுவையில் இருந்தபோதே தனது தொழிலை விரிவுபடுத்த வேண்டி எங்களிடம் மேற்கொண்டு பிரதிவாதிகடன் கேட்டு அதை நாங்கள் கொடுத்துள்ளோம் என்றால் இல்லை. பிரதிவாதி எங்களிடம் மேற்கொண்டு கடன் கேட்கவும் இல்லை எங்கள் வங்கி கொடுக்கவும் இல்லை. கடன் எதுவும் கொடுக்கவில்லை தனது தொழிலில் நஷ்டம் ஏற்பட்டு விட்டதாக பிரதிவாதி எங்கள் வங்கிக்கு தெரிவித்தார் என்றும் நாங்கள் வழக்கிற்காக இவ்வாறு தெரிவிக்கவில்லை என பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல.

4. பிரதிவாதி எங்களுக்கு ரூபாய் 8000/- தொகை மட்டும் தான் செலுத்த வேண்டும் என்றும் நாங்கள் அதிக வட்டி கேட்டு இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.01.29 18:26:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்